**கவனிக்க.**-*2023.11.27 ஆந் திகதிய 2359 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2360- 2023 නොවැම්බර් මස 24 වැනි සිකුරාදා - 2023.11.24

*2360 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 292 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023,திசெம்பர் மாதம்15ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பில் அமைந்துள்ள மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் ( அதன் குடியியல் நியாயாதிக்கத்தில்)

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கம்பனியொன்றை ஒடுக்குதல் செய்வதற்கான விண்ணப்பம்*

வழக்கு இலக்கம்: CHC/ 72/ 2023/ CO
தன்மை: கம்பனியை ஒடுக்குதல்
.

பதியுதீன் முகம்மட் உமர் சரீப்,
முகம்மட் சரீப் முகம்மட் இர்ஷாத்
இருவரும் எட்ஜ் டெக்னொலஜீஸ் எனும் தொழில் நாமத்தில்
கூட்டு முயற்சியாக தொழிலை நடாத்துகின்றனர்.
இல.114/01/01, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு -06.

*மனுதாரர்*

ஹோர்டன் டவர் என்ட் கொட்டேஜ் (பிரைவேட்) லிமிடெட்,
இல.42, ஹோர்டன் பீளேஸ், கொழும்பு 07.

*எதிர்- மனுதாரர்*

*கொழும்பில் அமைந்துள்ள ( அதன் குடியியல் அதிகார வரம்பிற்குட்பட்ட) மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனத்தை ஒடுக்குவதற்கான மனு 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி சட்டத்தரணி ஆறுமுகம் சகாய புணித சேகரன் என்பவரினால் மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. குறித்த மனுவானது விசாரணைக்காக 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ள கட்டளையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மனு மீதான விசாரணையின் போது நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது அவரது சட்டத்தரணி அல்லது பதிவு பெற்ற சட்டத்தரணியூடாக சமுகமளிக்கலாம் என்பதுடன் மனுவின் பிரதியானது கம்பனியின் கடனாளி அல்லது பங்களிப்பாளருக்கு அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் வழங்கப்படும்.*

*ஆறுமுகம் சகாய புணித சேகரன்,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 23/D/4,
தேசிய வீட்டுத் திட்டம்,
முஹாந்திரம் இ.டி. டபார் மாவத்தை,
கொழும்பு -05.*

Arumugam sagaya Punithasegaran,
Registered Attorney at Law of Petitioner,
No.23/ D/ 4, National Hosing Scheme,
Muhandiram E.D.,
Dabare Mawatha, Colombo-05.

***குறிப்பு***: *மேற்குறித்த மனு மீதான விசாரணையின் போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொண்டிருப்பின் அவர் அல்லது அவரின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணி ஆறுமுகம் சகாய புனிதசேகரன், என்பவருக்கு நேரில் அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்ப வேண்டும் அல்லது அவரது பதிவுபெற்ற சட்டத்தரணியினால் ( அவ்வாறு இருப்பின்) கையொப்பமிட்டு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் மேற்குறித்தவருக்கு போதிய கால அவகாசத்துடன் 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.*

*ஆறுமுகம் சகாய புனிதசேகரன்,
மனுதாரரின் சட்டத்தரணி,*

*11- 505*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.